**செய்தி வெளியீடு எண் : 1456** **நாள் : 22.07.2023**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (22.07.2023) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை 7ஆவது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்–2023 போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்கின்றன. சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில் மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் புரனமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ரூபாய் 16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பாரிஸ் ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை ஆடுதளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை ஆடுதளம் மற்றும் இணைப்பு பணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர் கூடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (22.07.2023) மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடைபெற்று வருகின்ற பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். நடைபெற்று வருகின்ற அனைத்து பணிகளையும் இரண்டு நாட்களுக்குள் முடிக்க உத்தரவிட்டார்.**

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in